இந்தக்கவியில், அறிவுமுதலான சிறப்புகளிருந்தபோதி லும், குலமேன்மையில்லாதபோயின, எவரும் 'சானறோர்' என்னுங் கௌரவப்பட்டப்பெயர்பெற அயோக்கியராவர் எனச் சொல்லியிருக்கின்றது. பூர்வகாலத்தில் அரசர்குலத்த வர்களுக்குக் குலமேன்மையோடு அறிவுமுதலான சிறப்புக்

* மிகைமக்கள்=மேன்மக்கள்.

குணங்களு முண்டாயிருந்தமையால், 'சானரூர்' என்னுங் கௌரவப்பட்டப்பெயர் அகுலத்தவர்களுக்குரிய பெயராயிற்று.

இவற்றை ஒருங்கே திரட்டிப்பார்வையிடும்போது, நாலடியார் என்னும்நூல் எழுதப்பட்டகாலத்தில், மன்னர்குலத்தவர்களுக்குச் 'சாணர்' என்னும் மரூஉமொழிப்பெயரல்ல, 'சான்றோர்' என்னும் அப்பட்டமான கௌரவப்பட்டப்பெயர் வழங்கிவந்திருப்பது ருசுவாகின்றது.

திருவள்ளுவர்திருக்குறள்.

திருவள்ளுவர் பகவனுக்கு ஆதியிடத்திற்பிறந்த புத்திரன். பகவன பார்ப்பனக்குலத்திலும், ஆதி என்பவள் தவமுனிக்கு ஒரு பிராமணப்பெண்ணிடத்திலும பிறந்தவர்கள். அந்த ஆதி எனபவள் முதல் உறையூர்ப்பெருமபறையன் வீட்டிலும், பின்பு உறையூருக்கடுத்தமேலூரில் நீதியையனவீட்டிலும் வளர்ந்தபெண். இந்த ஆதிக்கும் பகவனுக்கும் புதல்வனுகவந்துதித்தவர் திருவள்ளுவர். ஆனதால் இவர் சுத்தப்பறையர்குலத்தில் உதித்தவரென்று சொல்லுதற்கு ஏதுவில்லே. இவர் சிறுபிராயமுதல் கல்வியறிவுகளில் மிகுதேர்ச்சிபெற்றவர். திருக்குறளே எழுதுதற்குத் திருமூலர்திருமந்திரம் மூவாயிரமும், நாலடியார் என்னும் நீதிநூலும் திருவள்ளுவருக்கு முன்னூல்களாயிருந்தன. இந்த மூன்று நீதிநூல்களில், திருமூலர் எழுதியநூல் ஆதிநூல். அது அப்பட்டமான பூர்வசுத்தத்தமிழில் எழுதப்பட்டிருக்கின்றது. தமிழரசர் மகிமைபெற்றிருந்தகாலத்தில் நாலடியார் என்னும் நீதிநூல் எழுதப்பட்டது. மதுரைக் கல்விச்சங்கங்களில் கடைச்சங்கம் முடிவடையப்போகிறகாலத்தில் திருவள்ளுவரிருந்தார். இந்துக்கள் பூலோக சாசார உற்பத்திக்கு மூலகாரணமாகிய வஸ்து ஆண்பெண்டன்மை விரவிய பொருளாயிருக்கவேண்டுமென அபிப்பிராயங்கொண்டார்கள். ஒருவித்துப் பயனபடுதற்கு வினேநிலம்வேணும். அதுபோல ஒரு. திருட்டியுண்டாகிறதற்கும் வித்தும்நிலமும்வேண்டும். வித்து ஆணென்றும் இடம பெண்ணென்றும் வகுத்துக்கொண்டனர். அவற்றை

லிங்கமும் ஆவிடையுமாக்கி நிர்மிதஞ்செய்தார்கள். இவ்விரு தனமையும் ஒன்றுபப பொருந்திநிற்பதைச் சிவசத்தி எனவும், சத்திசிவம் எனவுங் கூறினர். அனறியும சிவபிரான் உடலே ஆண்ரூபம்பாதி பெண்ரூபம்பாதியாக்கிய சித்தாந்தத் தாற்பரியமும இதுவேயாம். அன்னையில் நிலமும பிதாவில் வித்துந்தோனறி ஒரு சிசு பூலோகத்தில் உற்பத்தியாகின்றது என வைத்து, "அன்னையும பிதாவும முன்னறிதெய்வம" என்றார்கள். புத்திரோற்பத்திக்கு ஆண்பெண் என்னுமிருதன மைபபொருத்தம வேண்டியதுபோல, சராசர உற்பதிக்கும் கடவுளுகளுள் ஆண்பெண்டன்மைப் பொருத்தமிருக்க வேண்டுமென்றெண்ணினர.

(xiii) இந்த அபிப்பிராயத்தைத் திருவள்ளுவர் ஒப்பி, திருகுறள், கடவுள்வாழ்த்து, 1-வது கவியில் அமைத்து வைத்திருக்கின்றனர் என்பது இந்துமத நூலாசிரியரது சித்தாந்தம.

1-வது கவி.

"அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு."

இந்தக்கவியில் 'ஆதிபகவன் முதற்றேயுலகு' எனறெழுதி வைத்திருக்கிறார். 'ஆதிபகவன் முதற்றேயுலகு' என்பதற்கு 'உலகம் ஆதிபகவனே முதலாகவுடைத்து' எனபது இயல்புத் தாற்பரியம். இதற்கு உள்ளுறைப்பொருள்: உலக உற்பத்திக்கு ஆணபெண்டன்மைகளே யொருங்கேபொருந்திய ஆதி பகவனுடைய கடவுள் முதற்காரணமாயிருப்பதுபோல் திருவள்ளுவருடைய உற்பத்திக்கு அவருக்கு அனனையாகிய ஆதியும், பிதாவாகிய பகவனும் அவர் முனனறிதகாரணராயிருந்தனர். கடவுளினிடத்திலும் ஆண்பெண்டன்மைகள் ஒருங்கே பொருந்தியிருப்பதால், திருவள்ளுவர் தம்முடைய தாய்தந்தையர்கள் பெயரால் அக்கடவுளுக்கு 'ஆதிபகவன்' எனப் பெயர்கூறியிருக்கிறார். ஆனதால், 'ஆதிபகவன்' என்பதற்கு 'உற்பத்திக்குக் காரணமாகிய ஆண்பெண்டன்மைகள் ஒருங்கேபொருந்திய கடவுள்' ஏன்பது சப்தார்த்தமாம். ஆகவே

திருவள்ளுவர் தம்முடைய தாயாராகிய ஆதிபெயரையும், தந்தையாகிய பகவன்பெயரையும் இருபெயரொட்டுபெய ராகிக் கடவுளுக்கு நாமகரணஞ்சூட்டி இந்தக்களுடைய உலக உற்பத்தி மூலக்கருத்தை அத்தப்பெயரில் அமைத்துவைத் திருப்பதாக விளக்குகிறது.

திருக்குறள் என்னும் நூலேப்புகழ்ந்துபேசுகிற திருவள்ளுவ மாலையானது தமிழ்க் கடைச்சங்கத்தைச்சேர்ந்த நாற்பத தொன்பது புலவர்களால் ஆளுகொருகவியாகப் பாடப்பட டிருக்கின்றது. அந்தப்புலவாகளிற சிலர் பாண்டியனே முன னிலேவிளியாகவைத்துப பேசியிருக்கிறார்கள். பொருட்பால் முழுவதும் அரசியலுக்குரிய நீதிநூலேப் போதிக்கையில் 'சானரோர்' என்னும் அரசர்குலகுளைரவபபட்டபபெயர் அதில் வந்து வழங்கியிருகிறது. ஆனதால், இந்தத் திருக குறளிலிருந்து சில திநட்டாந்தங்கள் இங்ஙனம பேர்த்தெழு திகாடடுவோம்.

(xiv) திருக்குறன், பொருட்பால், 99-வது அதிகாரம், சானருண்மை.

இந்த அதிகாரம் "சான்ரோர், சானரூர, சான்றவர்" என னும் பெயர்களுக்கு மூலபதமினனதெனவும், அவற்றின் தாற் பரியமினனதெனறுந் தெளிவுறக்காட்டுகினற்து. 'சான்ரோர' எனபதற்குச் சால்புத்தனமையுடையோர், சானருண்மை யுடையோர, பலசிறப்புக்குணங்களும் நிறைந்து அவைகளே யாளுந்தனமையுடையோர், குலம குணங் கொடை புஜபலம் பாராளுரிமை கல்வியாகிய மேன்மைகளேயுடையோர் என பது தாற்பரியமாம.

1-வது கலி.

"கடனென்பதல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்ருண்மை மேற்கொள்பவர்க்கு."

இந்தக்கலியிலுள்ள 'சான்ருண்மை' என்னும்பதம் 'சால்' என்னும வினேமுதலினின்று பிறந்தது. இம்மொழிக்குச் சகல சிறப்புக்குணங்களுஞ் சிறப்புச் செய்கைகளும் ஒருங்கே

பொருந்தியவன் என்பது பொருளாம். 'சான்றோன்' எனப் பட்டபெயர்பெற்றவன் நற்குடிப்பிறப்புடையோனுமையால், நற்குணச்சிறபபும் நற்செய்கைச்சிறப்புமுடையோனுமிருக்கவேண்டும் என இந்தச்செய்யுள் கூறுகின்றது.

2-வது கவி.

"குணநலஞ் சானறோர் நலனே பிறநல
மெண்ணலத்துள்ளதூஉமன்று."

இக்கவியில் ஒருவன் வான்றோய்குடிப்பிறந்தோனுயிருந்த போதிலும், அவனுக்கிருக்கவேண்டிய லக்ஷணங்களிராது போயின அவனு 'சானறோன்' என்னுங் கௌரவப்பட்டம பெறுதற்கு யோக்கியனுகான் எனக் கூறியிருக்கிறது. இங்ஙனம் 'சானறோர்' எனவந்திருக்கின்ற பெயருக்குச் 'சால்புத் தனமைபெறறோர்' எனபது கருத்தாம்.

3-வது கவி.

"அன்புநாணெஞ்புரவு கண்ணேட்டமவாய்மையோ
டைந்துசால் பூனறியதூண்."

இச்செய்யுளில் வந்திருக்கின்ற 'சால்பு' எனனும்பெயர் 'சால்' என்னும் வினைமுதலடியாய்ப் பிறந்துவந்திருகிற தொழிற்பெயராம். ஆனதால் சால்புத்தன்மையுடையவராகிய சானறோருக்குக் குடிகள்மேல் அன்பும், தினருபுரிய நாணமும், வறையாதளிக்குஞ் கொடையும், பழைய நடப்புபாராட்டுஞ்சீரும், சதநியவாக்குமிருக்கவேண்டுமெனைக் கூறியிருக்கின்றது.

4-வது கவி.

"கொல்லாநலத்தது நோன்மை பிறர்நீமை
சொல்லாநலத்தது சால்பு."

இதில் சால்புத்தன்மையானது யாவரிடத்திலும நீமைபுரியாதொழுகும் ஒழுக்கமென உரைத்திருக்கிறது.

5-வது கவி.

"ஆற்றுவாராற்றல் பணிதலதுசானறோர்
மாற்றுரை மாற்றும்படை."

இங்ஙனம் சால்புத்தன்மையுடைய சான்ரோர் எதிரிகளை உபாயத்தாலிணக்கி வெல்லும் வல்லபமுடையவர்கள்எனச் சொல்லியிருக்கினறது.

6-வது கவி.

"சால்பிற்குக் கட்டளையாதெனிற்ரோல்வி
தூலையல்லார் கண்ணுங்கொளல்."

இதற்கு எதிரிகள் இழிந்தவர்களேயாயின் 'சான்ரோர்' அவர்களோடெதிர்த்துப் போர்புரிந்து வெற்றிபெறக் கருதார் எனபது தாற்பரியமாம. சான்ரோருக்குச் சானருண்மைக குணங்களுண்டாயிருபபதே அதற்குக் காரணமாகும். இழிந்தவர்களை வெல்லுங்காலத்தில் இவாகள் தங்களுக்குச் சமமானவர்களாகிவிடுவார்களென நினைத்து அவ்வாறு செய்கினறனர்.

7-வது கவி.

"இன்னுசெய்தார்க்கு மினியவேசெய்யாக்கா
லெனனபயத்ததோ சால்பு."

இந்தக்கவியில், சால்புத்தன்மையுடைய சான்ரோர் தங்களுக்குத் தீமைபுரியும் எதிரிகளுக்கும் நன்மையேபுரிவர்எனக் கூறியிருக்கினறது.

8-வது கவி.

"இன்மையொருவற்கிழிவன்று சால்பென்னுந்
திண்மையுண்டாகப்பெறின்."

இதில் சால்பென்னுந் திண்மையையுடைய 'சான்ரோன்' தரித்திரமடைந்தபோதிலும், சான்ருண்மைக்குப் பங்கம் வரநடவான் எனச் சொல்லியிருக்கிறது. 'சால்பென்னுந் திண்மையுடையோன்' என்பதற்குக் குலமேன்மையும், மனவலிமையும், புஜபலமும், சத்தியவாக்கும், உரமென்னுங் கல்வியறிவுமுடையோன்என்பது தாற்பரியமாம்.

9-வது கவி.

"ஊழிபெயரினுந் தாம்பெயரார் சான்ருண்மைக்
காழியெனப்படுவார்."

இத்தக்கவியில், சானறுண்மைக்காழியெனப்படுபவர்களாகிய சானறோர்கள் கடலுங்கரையும் நிலேருலேயும் ஊழிகாலங்களாகிய கல்பாந்தபபிரளயகாலங்களை வந்தபோதினும், சான்றுண்மையாகிய கடற்கரைவரம்பழிய அவ்வெல்கையைத் தாண்டி ஒருபோதும் நடவார்என் உரைத்திருக்கின்றது. 'சானறுண்மைக்கு ஆழியெனப்படுவார்'. என்னுந் தொடருக்குச் 'சால்புத்திண்மையாகிய சமுத்திரத்திற்குக் கரைஎனப்படுகின்றவர்கள்' என்பது தாற்பரியமாம். இத்தன்மையுடையவர்களே சானறோர்குலத்தவர்களாவர்.

10-வது கவி.

"சான்றவர்சான்றுண்மை குன்றினிலந்தான்
றுங்காதுமன்னே பொறை."

இங்ஙனம் சான்றோர்கள் சானறுண்மையற்றவர்களாயின், பெரியபூமியானது தன் பாரத்தைத் தாங்கிக்கொளளமாட்டாதுஎன்பது தாற்பரியம். இதற்கு அரசர்குலத்தவர்களாகிய சான்றோர்கள் பூமிபாரத்தாங்கி அதைப பாதுகாபபதற்குச் சான்றுண்மையுடையவர்களாயிருகவேண்டுமெ என்பது கருத்தாம.

இந்த 99-வது அதிகாரப்பொருளே, பொருட்பால் கூறுகின்ற முக்கியநோக்கப்பிரகாரம், அரசவம்சத்தவர்களாகிய சான்றோர்குலத்தவர்களுக்கு அமைத்துப் பொருள்கூறின், சால்புற்ற சான்றுண்மைக்குரிய சத்திரிய லக்ஷணங்களிணத்தையும் ஒருங்கேயுடையவர்கள் சான்றோர்குலத்தவர்கள்என்பது பொருளாகும். மற்ற அதிகாரங்களுக்கொப்பத்தம் இதிலும் வேதாந்தக்கருத்தையமைத்து, பிறகுலங்களுக்கு ஏற்குமிடங்களில் பொருளுக்கேற்பப் பேயியுரைத்தலும் வழுவன்றும. அரசர்களுக்கு புத்திபோதனைகூறுகின்ற இந்தப் பொருட்பாலில், தொல்காப்பிய ஞற்பிரகாரம் 'சான்றோர்' எனனும் அரசர்குலப்பட்டப்பெயர் வந்திருப்பதையும், அந்தப்பெயருக்கு மூலபதம் 'சால்' என்னும் வினையெனத் தோன்ற வுரைத்திருப்பதையும், சால்பு என்னுங்குணத்தில் 'நேர்மை, பண்பு, ஊக்கம், மாட்சிமை, கல்வி' என்னும் லக்ஷணங்களும்,

திண்மை என்பதில் 'வலிமை, மெய்மை, உரம, நிதானம், பாரம்' என்னுந்தன்மைகளும் இணைந்துவந்திருப்பதையுங் கூர்ந்துணரவேண்டும்.

ஆகவே, திருவள்ளுவர்காலத்திலும் 'சாணூர்' எனனும் மருஉமொழிப்பெயரல்ல, தொல்காப்பிய நூற்பிரகாரம், 'சான்றோர்'* என்னும் அப்பட்டமான கௌரவப்பட்டப்பெயர்களே வழங்கிவந்திருப்பது ருசுவாகின்றது.

இனிக் கம்பராமாயணத்திலிருந்து சில உதாரணங்கள் எடுத்தரைப்போம்.

(xv) கம்பராமாயணம், உயுத்தகாண்டம், திருவபிஷேகப்படலம், ஏட்டுப்பிரதியில் 35-வது கவி :

[அச்சுப்பிரதியிலுள்ள 35-வது கவி ஏட்டுப்பிரதியிலில்லை.]

"அந்தணர்வணிகர்வேளாண் மரபினராலிநாட்டுச்
சந்தணிபுயத்துவள்ளற் சடையனேயனேயசான்றோர்
உய்ந்தனமடியோமென்னு முவகையருவுரிதான
வந்தனரிராமனகோயில் மங்கலத்தரிசிமாக்கள்."

இந்தக்கவியில் ஸ்ரீராமருடைய பட்டாபிஷேகத்திருக்கோலங் காணவரும்படி நாடெங்குனும் பறைசாற்றியவுடனே, அந்தணரும், வணிகரும், வேளாண்மரபினரும், சந்தணிபுயத்துவள்ளற் சடையனேயனேய சானறோரும், மிகுதிரளாக அயோத்திமாநகரத்திற்கு வந்தார்கள்எனச் சொல்லியிருக்கின்றது. 'அந்தணர்' என்பது முதலாவது குலமாகிய பார்ப்பனக்குலத்தையும் 'வணிகர்' என்பது மூன்றுவது குலமாகிய செட்டிக்குலத்தையும் 'வேளாண்மரபினர்' என்பது நான்காவது குலமாகிய சூத்திரகுலத்தையும் 'சான்றோர்' என்பது இரண்டாவது குலமாகிய அரசர்குலமென்னப்பட்ட சத்திரிய குலத்தையும் குறிக்கும். இந்தப்பிரகாரம், கம்பநாடர் தொல்காபபியனூற்பிரகாரம் அரசர்குலத்தவர்களுக்குத் தன்காலத்தில் சான்றோர்குலத்தவர்களெனப் பெயர்வந்து வழங்கியமையால், அரசர்குலத்தைச் சான்றோர்குலமென எழுதிவைத்திரு

* சான்றோர்=சான்னூர்.

க்கிறார். மேற்படி கவியில், ராசகுலத்திற்குச் 'சான்றோர்குல மெனப்பெயர்வந்திருக்கிறமையால் 'சான்றோர்' என்னும் பெயருடன ஒருபொருளில் தொகைநிலைப்பெயர்களாக வருகிறன 'சான்றர், சானறவர்' என்னுமபெயர்களும் அந்த அரசர்குலத்திற்கேயுரியபெயர்களாகும. அந்தப்படிக்கு அரசர்குலத்திற்குச் 'சானறர்குலம்' எனவும், 'சான்றவர்குலம்' எனவும் பெயர்கள்வந்து வழங்குகினறன. இப்படியிருக்க, சானறோர்குலத்தவர்கள் அரசர்குலத்தவர்களாகிய சத்திரியகுலதவர்களல்லவென்று யார்சொல்லத்துணியலாம் ?

(xvi) கம்பராமாயணம், கிஷ்கிந்தாகாண்டம், அரசியற் படலம், 50-வது கவி :

" ஆன்றவர்க்குரியதாய வரசினேநிறுவியப்பால்
ஏன்றெனக்குரியதாய கருமமுமியற்றற்கொத்த
சான்றவர்நின்னினில்லே யாகலாற்றருமந்தானே
போனறநீயானேவேண்ட வத்தலேபோதியென்றன்."

இந்தக்கவியில் ஸ்ரீராமர் அனுமானேப்பார்த்து, 'சான்றவர் நினனினில்லே' என்கிறார். 'சான்றவர் நின்னினில்லே' எனபதற்கு 'அரசர்குலத்தவர்களாகிய சத்திரியர்களில் உனனிலுமுயர்ந்த சத்திரியனில்லே' எனபது பொருளாம். மேலும், 'ஆனறவாக்குரியதான வரசினேநிறுவி' எனவும் வந்திருக்கிறது. அதற்குச் 'சானறோருக்குரியதான அரசைநிறுத்தி' என்றும், 'அரசாகுலத்தவர்களுக்குரிய அரசைநிறுத்தி' எனறும் பொருளாகும்.

(xvii) மேற்படி கிஷ்கிந்தாகாண்டம், நாடவிட்டபடலம், 50-வது கவி :

" மூல்லேயுமுருந்திமுத்து முறுவலென்றுரைத்தபோது
சொல்லேயுமமிர்தம்பாலுந் தேனுமென்றுரைத்தனேறும்
அல்லதொன்றுவதில்லே யுமிர்திற்குமுவமையுண்டோ
வல்லேயேலறிந்துகோடி ஹநிலாவாதுசான்றேய்."

இக்கவியில் ஸ்ரீராமர் வாயுபுத்திரனேப்பார்த்து, 'சான்

ண்கிறார். 'சான்றோய்' என்பதற்குச் 'சானறோனே' என வும், அரசர்குலத்தவனே, சத்திரியனே' எனவும பொருளாம்.'

மேற்படிபடலம, 65-வது கவியிலும் அனுமான் 'சான் றோன்' என்னப்பட்டிருக்கிறான்.

(xviii) இவைகளேயனறி,

அயோத்தியாகாண்டம், நகர்நீங்குபடலம, ர்-வது, 138-வது கவிகளேயும,

" ஆற்றுப்படலம், 14-வது கவியையும்,

" இளேகண்டிநீங்கு படலம, 89 - வது, 126-வது, 137-வது கவிகளேயும்,

ஆரணியகாண்டம், கவந்தன்படலம், 25-வது, 42-வது கவி களேயுங்காண்க.

(xix) கம்பராமாயணம், உயுத்தகாண்டம், பிரமாஸ்தி ரப்படலம், 211-வது, கவி:

" சான்றோர்மாதைத்தக்கதரக்கன் சிறைதட்ட
வான்றோர்சொல்லுநல்லற மன்னவசமாஞல்
மூன்றுர்நின்றபேருலகொன்றுய் முடியாவேற்
றோன்றுவோவெனவல்விலின வீரத்தொழிலம்மா."

இங்ஙனம, சீதைக்குச் 'சானறோர்மாது' எனப் பெயர் வந்திருக்கிறது. 'சானறோர்மாது' எனபதற்குச் 'சான்றோர்' குலப்பெண்,* அரசர்குலப்பெண், சத்திரியகுலப்பெண்' என் பது தாற்பரியமாகும்.

(xx) கம்பராமாயணம், உயுத்தகாண்டம், மந்திரப்பட லம், 23-வது கவி:

" மற்றவனபின்னுற மகோதரப்பெயர்க்
கற்றடந்தோளிஞ னெரியுங்கண்ணினன்
முற்றுறநோக்கினன முடிவுமன்னதாற்
கொற்றவகேனென விணேயகூறினன்."

இத்தக்கவியில், இராவணன் சபரமண்டபத்திற்கூடிய மந்

* " சானறோர்குலப்பெண்" என்பது மரூஉ.

திரிகள் படைத்தலைவர்களோடு ஆலோசனைசெய்கையில் அவனுடைய மந்திரிகளிலொருவனுகிய மகோதரன் இன்னபடி சொல்ல ஆரம்பித்தானெனறு சொல்லியிருக்கிறது. இராவணன் மந்திரியாகிய இந்த மகோதரன் சான்றோர்குலச்சத்திரியன் என்னப்பட்டிருக்கிறனன.*

(xxi) இவாகரனூலாசிரியனன சேந்தன் சான்றோர்குலச்சத்திரியன், அதற்கு விபரம்வருமாறு :

(a) திவாகரம், தெய்வப்பெயர்த்தொகுதி, கடைசிக்கவி.

"வடனூற்கரசன் தென்றமிழ்க்கவிஞன்
கவியரங்கேற்று மூபயகவிப்புலவன்
செறிகுணத்தம்பற் கிழவோனசேந்த
னறிவுகரியாக தெரிசொற்றிவாகரத்து
முதலாவது தெய்வப்பெயர்த்தொகுதி."

இதில் சேந்தனுக்கு 'அம்பற்கிழவோன்' எனப் பெயர்வத்திருக்கிறது. 'அம்பற்கிழவோன்' என்பதற்குக் காவிரிநதித் தீரத்திலிருந்த சிறுநாடுகளிலொன்றுகிய "அம்பன்நாட்டிற் குரியவன, அம்பன்நாட்டரசன" என்பது பொருளாம்.†

---

* திருவெண்காட்டுச்சான்றோர்மடம், தாமிரசாதனம், காண்க.

† "அம்பற்கிழவோன்" என்னுந்தொடரில் வந்திருக்கின்ற 'கிழவோன்' எனனும்பெயர் மருதநிலப்பூமியாண்டுவந்த அரசன்பெயராம்.

திவாகரம், மக்கட்பெயர்த்தொகுதி, 139-வது சூத்திரம்,
மருதநிலத்தலைவன்பெயர்.

"ஊரன்மகிழ்நன் கிழவனென்றிவை,
சாலிமருதத் தலைவன்பெயரே."

இந்தச்சூத்திரத்தில், 'கிழவன்' எனவந்திருக்கின்றபெயர் 'கிழவோன்' என்னும்பெயருடன் ஒருபொருள்கொண்டதாம். மேற்படி சேந்தன் 'கிழவோன்' எனப் பட்டப்பெயர் பெற்றிருக்கினறமையால், அவன் மருதநிலப்பூமியாண்டுவந்த அரசர்களிலொருவனும்.

(b) திவாகரம், மக்கட்பெயர்த்தொகுதி, கடைசிக்கவி.

"கற்றநாவினன் கேட்டசெவியினன்
முற்றவுணர்ந்த மூதறிவாள
ஞகரிகநாட்டத் தாரியனருவத்தைத்
தேருங்காட்சிச் சேந்தன்றிவாகரத்
திரண்டாவது மக்கட்பெயர்த்தொகுதி."

இதில் சேந்தனுக்கு 'ஆரியன' எனப் பெயர்வந்திருக்கின்றது. 'ஆரியன்' என்னும்பெயர், திவாகரம், மக்கட்பெயர்த் தொகுதி, 11-வது சூத்திரப்பிரகாரம், 'சானரோர்' என்னும பெயருடன் ஒருபொருள்கொண்ட பதமாம.

(c) திவாகரம், விலங்கின்பெயர்த்தொகுதி, கடைசிக் கவி.

"காதலீகையிற் போதிப்பெருந்தவன்
றெவ்வகிகால வைவேலெழிலி
யவ்வைபாடிய வம்பற்கிழவன்
றேனரூர்ச்சேந்தன் றெரிசொற்றிவாகரத்து
மூன்றுவது விலங்கின்பெயர்த்தொகுதி."

இங்ஙனம, சேந்தன் 'வைவேலெழிலி யவ்வைபாடிய அம் பற்கிழவன்' என்னப்பட்டிருக்கிறான். ஆனதால், அவன் அம பன்தாடாண்டவரசன்.

(d) திவாகரம, மரப்பெயர்த்தொகுதி, கடைசிக்கவி.

"நாடேபிறர்நாட்டிற் குவமையாறே
காலமறிந்திதவும் காவிரிதானே
யாடவர்திலக னம்பன்மன்ன
னீடிசைத்தகேவ்வருவந்தைச் சேந்த
னுய்த்ததிவாகரத்தரும் பொருள்வினைக்கு
நான்காவது மரப்பெயர்த்தொகுதி."

இந்தக்கவியில், சேந்தனுக்கு 'அம்பன்மன்னன்' எனப் பெயர்வந்திருக்கின்றது. 'அம்பன்மன்னன்' என்பதற்கு 'அம் பன் நாட்டரசன்' என்றுபொருளாம்.

(e) திவாகரம், இடப்பெயர்த்தொகுதி, கடைசிக்கவி

"ஒருவற்கொருவனுகி யுதவியும்
பரிணமாககள் பற்பலராயினுந்
தானொருவன்னே தரணிமாநவன்
செந்தமிழ்ச்சேந்தன் றெரிந்தநிவாகரத்
தைந்தாவது இடப்பெயர்த்தொகுதி."

இங்ஙனம் சேந்தனுக்குத் 'தரணிமானவன்' எனவும் 'செந்தமிழ்ச்சேந்தன' எனவும் பெயர்கள் வந்திருக்கின்றன.

(f) திவாகரம், பல்பொருட்பெயர்த்தொகுதி, கடைசிக்கவி.

"வருநற்கங்கை வடதிசைப்பெருமையுந்
தென்றிசைச்சிறுமையு நீக்கியகுறுமுநி
குண்டிகைப்பழைம்புனற் காவிரிபெரும்பதி
யம்பற்கதிபதி சேந்தன்றிவாகரத்
தாருவது பல்பொருட்பெயர்த்தொகுதி."

இதில், சேந்தனுக்குக் 'காவிரிப்பெரும்பதி யம்பற்கதிபதி' எனப்பெயர்வந்திருக்கிறது. அப்பெயருக்குக் 'காவிரிநதித தீரத்திலிருக்கின்ற பெரும்பதியாகிய அம்பற்கு அரசன' என் பதுகருத்தாம்.

(g) திவாகரம், பண்புபற்றிய பெயர்த்தொகுதி, கடைசிக்கவி.

"மறக்குறும் போட்டியறத்தின்வழிநின்று,
கவிகைத்தண்ணளி புவிபெறவாணியி
னம்புலனுமம்பற்கோமான்
றிண்பெருஞ்சேந்தன்றிவாகரத்தெட்டாவது
பண்புபற்றிய பெயர்த்தொகுதி."

இந்தக்கவியில், சேர்ந்தனுக்கு 'அம்பற்கோமான்' என்று பேரிட்டிருக்கிறது. இந்தப்பேருக்கும் 'அம்பன்நாட்டிற்கரசன' எனபதுபொருள்.

(h) திவாகரம், செயல்பற்றிய பெயாத்தொகுதி, கடை சிக்கவி.

"அண்ணல் செம்பாதிக் காணியாட்டியைப்
பெண்ணணங்கைமூவுலகும் பெற்றவம்மையைச்
செந்தமிழ்மாலேயந் தாதிபுனைந்த
தாவலனம்பற் காவலனசேந்த
னியல்வுற்றதிவாகரத் தொனபதாவது
செயல்பற்றிய பெயர்த்தொகுதி."

இங்ஙனம், சேந்தனுக்கு 'அம்பற்காவலன' எனபபெயா த்திருபபதற்கு 'அம்பனநாடாண்ட மனனன்' எனபது பொருளாம். அன்றியும், உமையவளாகிய காளிகாதேவியின பேரில் 'செந்தமிழ்மாலேயந்தாதி' எனப்பெயர்பெற்ற ஒரு பிரபந்தமொன்று சேந்தன செய்ததாகவுஞ் சொல்லியிருக் கின்றது.

(h) திவாகரம், ஒலிபற்றியபெயர்த்தொகுதி, கடை சிககவி.

"அரக்கரைப்பொருத முரட்போர்வில்லும்
பாரதம்பொருத பேரிசைச்சிலேயுந்
தாருகற்கடிந்த வீரத்தயிலும்
பாடியபுலவன பதியம்பற்சேந்தன
பயில்வுற்றதிவாகரத்திப் பத்தாவ
தொலிபற்றிய பெயர்த்தொகுதி."

இதில், சேந்தனுக்கு 'அமபற்சேந்தன்' எனப் பெயா கொடுத்திருக்கிறது. அன்றியும், இந்தச்சேந்தன 'அரக்க ரைப்பொருதமுரட்போர்வில்' எனவும், 'பாரதம் பொருத பேரிசைச்சிலே' எனவும், 'தாருகற்கடிந்த வீரத்தயில்' எனவும் பெயர்பெற்ற மூன்றுநூல்கள் செய்ததாகவுஞ் சொல்லி யிருக்கிறது.

இந்த ஒன்பதுகவிகளிலுங் கூறியிருப்பதைத் திரட்டிப பார்க்கும்போது, சேந்தனுக்கு "வடநூற்கரசன, தென தமிழ்க்கவிஞன், கவியரங்கேற்றமுபயகவிப்புலவன, அமபற்

இழவோன், மூற்றவுணர்ந்தமூதறிவாளன், கறைறநாவினன் நாகரிகநாட்டத்தாரியன, ஈகையிற்போநிப்பெருந்தவன, ஆட வர்திலகன், அம்பனமன்னன், நீடிசைத்தலேவன், தாணிமான வன, செந்தமிழ்சேந்தன, அம்பற்கதிபதி, அம்பற்கோமான், அம்பற்காவலன' எனப்பெயர்கள் வந்திருப்பதால், அந்தச சேந்தன குலத்தாலுங, குணத்தாலுங், கொடையாலும், புஜ பலத்தாலும், பாராளுநிமையாலும், கல்வியறிவாலும் அர சாகுலமேனமையிற் சிறப்புற்றேங்கிய தமிழ்நாட்டுச்சததி ரியச்சான்றோகுலத்தவன் என்பது தானுகவினங்குகின்றது

(xxii) கம்பநாடன் தமிழ்நாட்டுச்சத்திரியகுலச்சான றோன என மேலே ஆறுவது பிரகாணத்தில் விபரமாகக் கூறியிருப்பதால், அதை இங்ஙனம் மீண்டுங் கூறிக்காட்டாது நிறுத்துதல் செய்கின்றும்.

ஆயினும், ஒருகவி இங்ஙனம் பேர்த்தெழுதுவோம். கமப ராமாயணம், தனியனகள்.

நேரிசைவெண்பா.

"தாரதலத்தினுள்ள தமிழ்க்குற்றமெல்லாம்
அரவுமரமாயிற்றன்றே—இராவணனமேல்
அம்புதாட்டாழ்வா னடிபணியு மாதித்தன
கம்பநாடனாழ்வான் கவி."

இத்தக்கவியில், கம்பனுக்கு 'ஆதித்தன் கம்பநாட்டாழ் வான' எனப் பெயர்வந்திருக்கிறது. 'ஆதித்தன்' என்பதற்குச 'சான்றோன' எனவும்; 'கம்பநாட்டான்ழ்வான்' என்பதற்குக் கமபநாடாள்வான, கம்பநாடான், கமபநாடன்' எனவுமப பொருளாகும். சேந்தனைப்போல கம்பனும் காவிரிநதிதி தீரத்திலுள்ள ஒரு சிறுநாட்டிற்கு அரசனுனதினாலும, கல்வி யறிவிற் சிறந்தவனுனதினாலும், 'நாடன், சான்றோன' எனனும் அரசர்குலப்பட்டப்பெயர்கள் பெற்றவனுனதாலும், அ வன தமிழ்நாட்டரசர்குலத்திலுதித்த தமிழ்ச்சத்திரியகுலச் சான்றோன எனபதற்குச் சந்தேகமில்லை.

(xxiii) தண்டியலங்காரஞ்செய்த தண்டியென்பவன சத்திரி யகுலச்சானறோனும். அவன் அம்பிகாபதியின் புத்திரன, கம்ப நாடனபோன. இத்தத்தண்டியென்பவன் அனபாயசோழன் காலத்தில் உத்தேசம் 800 வருடங்களுக்கு முன்னிருந்தபுல வன.

மேற்கோள்.

தண்டியலங்காரம், சிறப்புபபாயிரம்.

"வடதிசையிருந்து தென்மலைக்கேகி
மதிதவழ்குடுமிப் பொதியமால்வரை
இருந்தவன்றன்பா லருந்தமிழுணர்ந்த
பன்னிருபுலவரின முன்னவன்பகர்ந்த
தொல்காப்பியநெறி பல்காப்பியத்தும்
அணிபெறுமிலக்கண மரிதினிற்றெரிந்து
வடநூல்வழிமுறை மரபினின்வழா அது
ஈரிரண்டெல்லை யினிதவா மும்மைப்
பாகதவிலக்கணம் பண்புறத்தழீஇத்
திருந்தியமணிமுடிச் செம்பியனவையத்
தரும்பொருள்யாப்பின் வகுத்தனன்
ஆடகமன்றத்து நாடகநவிற்றும்
வடநூலுணர்ந்த தமிழ்நூற்புலவன்
பூவிரிதண்பொழிற் காவிரிநாட்டு
வம்பவிழ்தெரியலமபிகாபதி
மேவருந்தவத்தினிற்பயந்த
தாவருஞ் சீர்த்தித் தண்டியென்பவனே."

இச்சிறப்புப்பாயிரத்தில், தண்டியன்பவன் அம்பிகாபதி யின புதல்வன் என்னப்பட்டிருக்கிறான். அம்பிகாபதி கம்ப நாடன் புத்திரன். சமஸ்கிருதத்தில் மூதனூற்செய்தவனுக் குந் தண்டியென்றே பெயராம். அதைத் தமிழில் மொழிபெயர் த்த அம்பிகாபதியின் குமாரனுக்குந் தண்டியென்றேபெயர். இத்தத்தண்டி என்பவன் கம்பநாடன் பேரனெனபடியால், அவ னுஞ் சத்திரியகுலச்சான்றோனும்.

(xxiv) ஸ்ரீராமருஞ் சத்திரியகுலச்சான்ரோராம், கம்ப ராமாயணம், காப்புகள், 2-வது கவி :

"அஞ்சிலேயொனறுபெற்ரு னஞ்சிலேயொன்றைத்தாவி
அஞ்சிலேயொன்ருருக வாரியர்க்காகவேகி
அஞ்சிலேயொன்றுபெற்ற வணங்கைக்கண்டயலாரூரில்
அஞ்சிலேயொனறைவைத்தா னவனெம்மையளித்துக்காப் பான."

இந்தச்செய்யுளில், ஐம்பூதியங்களிலொன்ருகிய வாயுவுக்கு நாயகனுகிய வாயுபகவானுக்குப்பிறந்த அனுமன், ஐம்பூதியங்களிலொன்ருகிய சலம நிறைந்த கடலேத்தாண்டி, ஸ்ரீராமர் முதலான ஆரியர்* எனப்பெயர்பெற்ற சானரோகுலத்தவர்களுக்காக ஐம்பூதங்களிலொன்ருகிய ஆகாயமார்க்கமாகச் சென்று, ஐம்பூதங்களிலொனருகிய மணணுக்கு நாயகியான பூமாதேவிபெற்ற புத்திரியான சீதாதேவியைக் கண்ணுற்று, ஐம்பூதியங்களிலொனருகிய அக்கினியை இராவணனது இலங்காபுரியிலிட்டு அந்நகரியைச சுட்டழித்தனன் என வருகி--றது. இங்ஙனம, இராமர்குலமரபோர் 'ஆரியர்' எனனப பட்டிருக்கினறனர்.

திவாகரம், மக்கட்பெயர்த்தொகுதி, 11-வது சூத்திரம்.

"சான்ரோர்மிக்கோர் நல்லவர்மேலவ
ராய்ந்தோராரியர்ந்தோ ராரியருலகென
வாய்ந்தவானரே ராறிவுடையோரே."

இந்தச்சூத்திரத்தில் அரசர்குலப்பட்டப்பெயராகிய 'ஆரியர்' எனபது, 'சான்ரோர்' என்னும்பெயருடன் ஒருபொருள் கொண்ட பதமாகக் கூறியிருப்பதால், ஆரியர்குலத்தவர்கள் சான்ரோர் ஆவர். மேலே சிதைக்கும 'சான்ரோர்மாது' எனப்பெயர்வந்திருக்கிறது. ஆகவே, ஆரியகுலத்தவர்களும் சான்ரோர்குலத்தவர்களும் ஏககுலத்தினரென்பது பிரத்தியட்சமாகிறது.†

---

* cf. காந்தம், அண்டகோசப்படலம், 48-வது செய்யுள்.

† "Ayodia was founded by the race of Soorya by Ikshwaku Mithila was founded by Mithila the grandson of Ikshwaku." *Vide. Tod, Vol. 1., Chapt.* 16.

(xxv) கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், தைல மாட்டுபடலம், 46 - வது கவி :

"ஆரியனிளவலேதோக்கியய்யவிச்
சீரியவல்லன செப்பலெனறபின
பாரிடைவணங்கினன பதைக்குநெஞ்சினன
தேரிடைவித்தகன் சேறல்மேயினன."

இந்தக்கவியில், 'சான்ரோன' எனப்பெயர்பெற்ற ஸ்ரீராமரானவர் தன்தமபி இலக்ஷ்மணனேதோக்கி அவ்வாறுபேசாதே எனச் சொல்லித்தடுக்க, அவன அந்தபபடிசெயதான எனறு கூறுகையில் இராமருக்கு 'ஆரியன' எனப்பெயர்வந்திருகிறது. 'ஆரியன்' எனனும பட்டப்பெயரைச்சுட்டி இந்தபபிரகரணத்தின் பிற்பாகத்தில் தாற்பரியுங்கூற நினைதிருகினறமையால், இங்ஙனம் அதை நிறுத்துகிறோம். சேநதனனுக்கும் 'ஆரியன்' எனப் பட்டப்பேர் வந்திருப்பதாக மேலேகூறியிருக்கிறோம். இவர்கள் சான்ரோர்குலத்தவர்களானமையால், சானரா* குலத்தவர்களும் அவர்கள்தான், சானறவர்குலத்தவாகளும் அவர்கள்தான என்பதற்குச் சந்தேகமில்லை.

(xxvi) ஏஞ்சிநாததாயனூருஞ் சத்திரியகுலச்சான்ரோனும்.

பெரியபுராணம், ஏஞ்சிநாததாயனூர் புராணம 1-வது கவி:

"புண்டரிகம்பொனவரை மேலேற்றிப் புவியளிக்கும்
தண்டரள வெண்கவிகைத்தார்வளவர்சோணாட்டில்
வண்டறைபூஞ்சோலைவயன் மருதத்தண் பணைசூழ்ந்
தெண்டிசையுமேறிய சீர்மூதூரெயினனூர்."

இங்ஙனம், சோழவளநாட்டில் எயினனூர் என்றொரு பழயநகராமுண்டு எனச் சொல்லியிருக்கின்றது.

2-வது கவி :

"வேழக்கரும்பினெடு மென்கரும்பு தண்வயலிற்
சூழக்களிர்ச்சாலி தானெங்குந்தன்மையதாய்
வாழக்குடிதழைத்து மன்னியுவப்பொற்புதியில்
ஏழக்குலச்சான்ரோனெறி நாதனூர்."

* 'சானரா' என்பது மருவு.

இந்தக்கவியில், அந்த எயினனூரில் ஈழக்குலசான்றார் குலத்தில் ஏனதிநாதநாயனர் எனப பெயர்கொண்ட சிவ தொண்டரொருவரிருந்தாரென உரைத்திருக்கிறது.

(xxvii) இரட்டிலராசிரியர் (Rottler) எழுதியதமிழங்கி லேய அகார்தியில், 'ஈழம்' என்னும் மொழிக்கு அடியில ஏனதிநாதநாயனரைச்சுட்டி, "ஈழக்குலச்சானரேன, one of the 63 Apostles of சிவன" எனக் கண்டிருக்கினறது. பெ ரியபுராணம் ஓலையேட்டுபபிரதிகளிலும், ஏனதிநாதநாய னரை 'ஈழக்குலச்சானரேன்' என வரைந்திருக்கிறது

மேலே ஏனதிநாதநாயனருக்குச் 'சானரேன், சான்றன்' எனப் பெயர்கள் வந்திருக்கினறன. ஏனதிநாதர் தமிழரசாகுல த்தையொட்டியவரானதால், தொல்காப்பிய னூற்பிரகாரம், அவருகுச் 'சான்றன' எனவும், 'சான்ரேன' எனவும் சத்தி ரியகுலபபட்டப்பேர்கள் வந்திருக்கின்றன. ஆகவே அவைக ளோயொட்டிய 'சான்றவன்' எனனும் பெயரும் அவருக்குண்டு.

(xxviii) அரக்குமாளிகைஎனப் பெயர்கொண்ட இளவரசு நாடகம, 3-வது பக்கத்தில், ராயதலர் சூரியகுலத்திலகரா கிய இராமச்சந்திரகவிராயர் எழுதியிருபபது :

மங்களம்.

இராகம்—அசாவேரி. தாளம்—திரிபுடை.

மங்களஞ் செயமங்களம், சுபமங்களம் மங்களம.

* * * * * *

"சித்தித்திமுகையூர் தண்டைநக
ருந்தற்புத நாவலூர் வளநகர்
செப்புந்தலைமைக் கொருநதிகுல
முற்றும்புகழ் விற்பரிமளநிறை
சிரகதனமாலை புடைத்தவர்
காரணபத்திர காளிவரத்தினர்
சிங்கக்கொடியுந் தங்கமலையும்
வளங்கொண்ட
தங்கப்புகழால் தங்குநல்ல
சான்ரோர்க்கும்.....(மங்களஞ்.)

இத்தச்செய்யுளில், 'சானரோர' என்னும்பெயர் குலப்பெயர் எனவும், கங்காகுலத்தினர எனனும்பெயர் அவர்களுக்குப் பட்டப்பெயர்எனவும், சேரகமாலையணிதல் சானரோர்குலத்தினர்க்குரியதெனவும், காளிகாதேவி வரபுத்திரர் என்னும் பெயர் அவர்களுக்குண்டு எனவும், சிங்கக்கொடிகட்டி தங்கமலைபுமூடையராய்ப் புகழ்பெற்றிருந்தனர் எனவும் கூறியிருக்கினறது. ஆகவே, தமிழாசர்குலத்தவர்கள் 'சான்ரோர்' எனப்பெயர்படைத்து வந்திருப்பது நிசம் என நன்முயத் தெரியவருகிறது.

'சானரோர்' என்னும் அரசர்குலக்கௌரவப்பட்டப்பெயருக்குத் தாற்பரியமும மேற்கோளுங் கூறியானபடியால், இனி 'மிக்கோர்' எனனும் பெயருக்குத் தாற்பரியமும் மேற்கோளுங்கூறுவோம்.

3 மிக்கோர.

'மிக்கோர்' என்னும் பெயர், 'மிகு' என்னும் வினைமுதலடியினின்று பிறந்த 'மிக்கு' என்னுந் தொழிற்பெயரினின்று வந்த பலர்பாற்பெயராம். 'மிக்கன், மிக்கான், மிக்கோன' எனபவைகள் ஒருபொருள் ஆண்பாற்பெயர்கள். 'மிக்கர், மிக்கார், மிக்கோர்' என்பன ஒருபொருட்பலர்பாற்பெயர்கள். 'மிக்கோர்' என்பதற்கு நிறைத்தோர், பெருந்தனமையுடையோர்' என்பது தாற்பரியமாம்.

மிக்கோர்=Great-men,
=Noblemen,
=மேன்மக்கள்.

இது 'சான்ரோர்' என்னுங் கௌரவப்பட்டப்பெயருடன் ஒருபொருள்கொண்ட பெயராம். 'சான்ரோர்' என்னுங் கௌரவப்பட்டப்பெயர் பார்ப்பனக்குலத்தவர்களுக்கு ஏற்காதிருந்தும், 'மிக்கோர்' என்னும்பெயர் அவர்களுக்கு ஏற்கும். ஆகவே, மேறது ஜுத்திரத்தில் பார்ப்பனக்குலத்தவர்களுகு 'மிக்கவர்' என்னும் பெயர்வந்திருக்கின்றது. அரசர் குலத்தவர்கள் 'குலத்தரிஞ், குணத்தாலும், கொடையாலும்,

புஜபலத்தாலும், பாராளுரிமையாலும், அறிவாலும' மிக்கோர் ஆகுகினறனர். பார்ப்பனக்குலத்தவர்களோ 'குலத்தாலும், குணத்தாலும், தபோபலததாலும, அறிவாலும்' மிக்கோர் ஆகினறனா.

(i) கம்பராமாயணம், உயுத்தகாண்டம், மந்திரப்படலம், 99-வது கவி.

"இசையுஞ்செய்கையு முயர்குலத்தியற்கையுமெஞ்ச
வசையுங்கிண்மையும் மீக்கொளக்கிளேயொடுமடியா
தசைவில்கற்பினவ்வணங்கை விட்டருளுதியதன்மேல்
விலசயமில்லெனச சொல்வினனறிஞரின்மிக்கோன்."

இந்தக்கவியில், விபீஷணன் இராவணனைப்பார்த்து, நம் மூடைய குலத்துக்கு நாசமநேரிடாதபடிக்குச் சீதையை விட்டு விடு என்பதாக யோசனைசொன்னதாகச் சொல்லியிருக்கினறது. இங்ஙனம், விபீஷணனுக்கு 'அறிஞரின் மிக்கோன' எனப்பெயர்வந்திருக்கின்றது. விபீஷணன அசுரகுலச்சத்திரியனாகினுலே அவனுக்கு 'மிக்கோன்' எனவும், 'அறிவுடையோர்' எனப்பெயர்பெற்ற சத்திரியகுலத்தவருள் சிரேஷ்டனாகினுலே 'அறிஞரின் மிக்கோன்' எனவுஞ் சிறந்த பட்டப்பெயர் வந்திருக்கிறது.

(ii) கம்பராமாயணம், உயுத்தகாண்டம், ஒற்றுக்கேள் விப்படலம், 30-வது கவி.

"கல்விக்கண்மிக்கோனசொல்லக் கருமனநிருதக்கள்வர்
வல்விற்கைவீரமற்றிவ் வானரர்வலியைநோக்கி
வெல்விக்கையரிதென்றெண்ணி வினயத்தாலெம்மையெல்லாங்
கொல்விக்கவந்தான்மெய்ம்மை குரங்குதாங்கொன்கவென்னூர்."

இக்கவியில், அனுமனுக்கு 'கல்விக்கண்மிக்கோன' எனப்பெயாவந்திருக்கிறது. ஆஞ்சனேயன், கிஷ்கிந்தாநாட்டுச் சத்திரியனாகினுலே, 'சாண்றோன்' என்னும் பெயருடன ஒரு பொருளதொண்ட 'மிக்கோன்' என்னும்பெயர் அவனு

கேற்கும். அவன கல்வியறிவிலும் குன்றுதவில்லாத சத்திரி யனென உணர்த்துதற்கு, 'கல்விக்கண்மிக்கோன்' எனப பெயர்வந்திருக்கின்றது.

இனி அரசர்குலக்கௌரவப்பட்டப்பெயராகிய 'நல்லவர்' என்னும் பெயருக்குத் தாற்பரியமும், மேற்கோளும் கூறுவோம்.

4. நல்லவர்.

'நல்லவர்' என்னும்பெயர், 'நன்மை' எனனும் பண்புச் சொல்லடியிற்பிறந்த பலர்பாற்பெயர்ச்சொல்லாம. 'நல்லவன, நல்லான், நல்லோன' எனபன ஒருபொருள் ஆண்பாற் பெயாகள். 'நல்லவா, நல்லார், நல்லோர்' என்பவைகள் ஒருபொருட பலர்பாற்பெயர்கள். 'நல்லவர்' எனனும் பெயருக்கு 'நனமைநிறைந்தோர், அரசர்குலச் சிறப்புகளெல்லாமொருங்கேயுடையோர்' என்பது பொருளாம்.

நல்லவர் = Excellent-men,
= Great-men,
= Noblemen,
= மேனமக்கள்.

இதுவும் 'சான்றோர்' என்னுங கௌரவப்பட்டபெயருடன ஒருபொருளகொண்டபெயராம். குலத்தாலும், குணத்தாலும், கொடையாலும், புஜபலத்தாலும, பாரானுரிமையாலும, அறிவாலும் நலமபெற முதிர்ந்தவர்களே நல்லவர்களாம. 'சான்றோர்' என்னும் கௌரவப்பட்டப்பெயர் பார்பனக்குலத்தவர்களுக்கு ஏற்காதிருந்தாலும், 'நல்லவர்' எனனுமபெயர் அவர்களுக்கு ஏற்கும். இந்தபபெயா 'அந்தணா' எனனும் பெயருடன ஒருபொருள்கொண்ட பதமாம்.

(i) கம்பராமாயணம், பாலகாண்டம், கார்முகப்படலம், 32-வது கவி.

"தோகையரின்னசொல்லிடநல்லோர்
ஓகைவினம்பிட வும்பருவப்ப
மாகமடங்கலு மாஸ்விடையும்பொன்
நாகமுநாகமு நாணநடந்தான்."

இந்தக்கவியில், மணமங்கலவில்லே நாணேற்றுதற்கு இராமர் எழுந்து நடந்துபோகிறதைக்கண்ட சனங்களெல்லாரும் பற்பலவிதமாகப பேசிப்புகழ்ந்தனர் எனவும், அதைக்கேட்டு இராசசபையிலுள்ளவர்களெல்லாரும் மிகவுங் களிப்படைந்தனர் எனவுங கூறியிருக்கின்றது. இங்ஙனம், 'நல்லோர்' எனப் பெயர்பெற்றிருக்கிறவர்கள் இராசசபையிலிருந்த அரசாகுலப் பெரியோர்களாகிய சான்றோர்களாம்

(ii) கமபராமாயணம், அயோத்தியாகாண்டம், ஆறறுப்படலம, 22-வது கவி.

"நல்லவனுரைசெய நமபிகூறலும்
அல்லலிலமுங்கிய வனபின்மாதகர்
ஒல்லெனவிரைத்ததாலுயிரில் யாகையை
சொல்லெனுமமிர்தினுற் றுளித்ததென்னவே."

இதில், ஸ்ரீராமர் வனவாசஞ்செய்யப்போயினபின்னர், பரத பட்டாபிஷேகத்துக்குடனபடாமல், தனதமையனேயழைத்துவரச் சேனைகளோடு புறப்படப்போகிறன எனச் சொல்லியிருக்கின்றது இங்ஙனம்,பரதனுக்கு 'நல்லவன்' எனப பெயர்வந்திருக்கிறது. 'நல்லவன்' என்பதற்கு 'அரசர்குல மேன்மைகளாகிய நலங்களெல்லாம் ஒருங்கேயுடையவன எனபது பொருளாம். ஆனதால், "நல்லவன்' எனனும் பட டபபெயர 'சானறோன்' என்னும்பெயருடன ஒருபொருள கொண்ட பதமாம.

(iii) கம்பராமாயணம், கிஷ்கிந்தாகாண்டம், நாடவிடபடலம, 64-வது கவி.

"பூவருமழலேயனனம் புனைமடப்பிடியென்றினன
தேவருமருளத்தக்க செலவினனெனவுந்தேறின
பாவருங்கிழமைத்தொன்மைப் பருணிதர்தொடுத்தபத்,
நாவருங்கிளவிச்செல்வி நடைவருநடையணல்லோய்."

இந்தக்கவியில், ஸ்ரீராமர் அனுமனேப்பார்த்து, 'நல்லோ எனகிறார்.

நல்லோய்=நல்லோனே, விளி.

'நல்லோன' என்பதற்குச் 'சத்திரியகுலநலமெல்லாம் றைந்தவன்' என்பதுபொருளாம.

(iv) மேற்படி நாடவிட்டபடலம், 66-வது கவி.

"மங்கையரிவளேயொப்பார் மற்றுளரில்லேயென்னும்
சங்கையிலுள்ளத்தானே சானறெனக்கொண்டோனறே
அங்கவணிலேமையெல்லா மனந்தறிந்தருளுசார்ந்து
திங்கள்வாண்முகத்தினுட்குச் செபபெனப பின்னுமசெ
பும்."

இதில், ஸ்ரீராமர் அனுமனேப்பார்த்துச், 'சான்றோய்' எ
கிறார்.

சான்றோய்=சான்றோனே, விளி.

அனுமனுக்கு 'நல்லோன்' எனவும, 'சான்றோன்' எனவு
பெயர்கள் வந்திருக்கின்றமையால், இரண்டுபெயர்களும் ஒ
பொருள்கொண்ட சத்திரியகுலக்கெனறவப்பட்டப்பெயர்க
என்பதற்கு எள்ளளவுஞ் சந்தேகமேயில்லே.

(v) மேற்படி கிஷ்கிந்தாகாண்டம், பிலதீர்த்தபடல
58-வது கவி.

"நான்முகனுனித்தநெறி நூறுவரதொய்தாய்
மேன்முகநிமிர்த்தவெயில் காலொடிவிழுங்கா
மான்முகநலத்தவன் மயன்செய்ததவத்தால்
நான்முகனளித்தனதி மாநகரநல்லோய்."

இச்செய்யுளில், முன்போல அனுமனுக்கு 'நல்லோ
எனப்பெயர்வந்திருக்கிறது. மேற்படிபடலம், 61-வது கவி
லும், வாயுபுத்திரனுக்கு 'நல்லோய்' எனப்பேரிட்டிருக்கி
றது.

(vi) பின்னும், கம்பராமாயணம், கிஷ்கிந்தாகாண்ட
மயேந்திரப்படலம், 8-வது கவியிலும், சுந்தரகாண்டம், சூட
மணிபபடலம், 42-வது கவியிலுங் காண்க. இவைகளா

நல்லோர்' என்னும்பெயர் 'சான்றோர்' என்னும் பெயருடன ஒருபொருள்கொண்ட பூர்வ கௌரவப்பட்டப்பெயர் எனத் தெளிவாக விளங்கும்.

இனி 'மேலவர்' எனனும் பெயருக்குத்தாற்பரியமும், மேற்கோளுங் கூறுவோம்.

5. மேலவர்.

மேலவர் = மேலோர்,
= மேன்மக்கள்,
= Noblemen.

'மேலோர்' என்னும்பெயர் 'மேன்மை' என்னும் பண்புபபெயர்ச்சொல்லினறு பிறந்த பலர்பாற்பெயராம். 'மேலவன், மேலான், மேலோன்' என்பவைகள் ஆண்பால் ஒருபொருட்பெயர்களாம். 'மேல்வர், மேலார், மேலோர்' என்பன பலர்பால் ஒருபொருட்பெயர்களாகும். 'மேன்மை' எனபதற்கு (a) Greatness, (b) Grandeur, (c) Sublimity, (d) Eminence, (e) Excellence, (f) Magnanimity, (g) Dignity, 'மகத்துவம்' என்பது தாற்பரியமாம், ஆகவே, 'மேலோர்' என்பதற்கு, (a) Great-men, (b) Noblemen, (c) Kings and Princes, (d) அரசர்குலத்தார், 'மேன்மக்கள்' என்பது தாறபரியமாகும்.

அறிவொன்றைமாத்திரமுடைய எத்தக்குலத்தவர்களுக்கும் 'மேலோர், மேன்மக்கள்' என்னும்பெயர்கள் ஏற்கவேமாடடாது. பூர்வகுலமேன்மையையுடையவர்களுக்குமாத்திரம் இப்பெயர்கள் ஏற்கும். இந்த 'மேலோர், மேன்மக்கள்' என்னும் பெயர்கள் அரசர்குலமேன்மைகளோடே கல்வியறிவையுமுடையவர்களுக்குமாத்திரம் பூர்வஏற்பட்டமாம் பொருந்தும்.

நாலடியார், 16-வது அதிகாரத்தில், 'மேன்மக்கள்' என வந்திருக்கின்றபெயர் அரசர்குலத்தவர்களுக்கேயுரிய பிறந்த பூர்வபட்டப்பெயரென மேலே தெளிவாகக் காண்பித்திருக்கிறோம்.

இங்ஙனம் வேறு சொற்களையும் ஆராய்ந்துரைப்போம்.

(i) கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்திரப் படலம், 14-வது கவி.

"வெய்யவனகுலமுதல் வேந்தர்மேலவர்
செய்கையெனுருமுறை திறம்பலின்றியே
வையம்யாளுண்ட வாண்டுங்கன்மாட்சியால்
ஐயமிலறுபதினாயிரமமரோ."

இக்கவியில், 'தசரதமகாராஜன் சபாமண்டபத்திற்கூடிய இராசசபையார்களைப்பார்த்து, "வெய்யவன் குலமுதல் வேந்தர்மேலவர்" என்று சொல்லுகிறான். 'வெய்யவன்குலமுதல் வேந்தர்மேலவர்' என்பதற்கு 'சூரியசந்திரகுலங்களிலுதித்த அரசாகுலத்தவர்களாகிய சத்திரியர்களே, 'மேலவர்' என்னும் கௌரவப்பட்டப்பெயர் பெறத்தக்க பெரியோர்கள் என்பது பொருளாம். ஆனதால், வேந்தர்குலத்தவர்களே, 'மேலவர், மேலோர், மேனமக்கள்' என்னுஞ் சிறப்புப்பெயர் பெறுதகவாகள் எனபது இதனல் தெளிவாகவினங்குகி

(ii) மேற்படி மந்திரப்படலம், 8-வது கவி.

"காலமுமிடனுமேற்ற கருவியுந்தெரியக்கற்ற
நூலுறநோக்கித்தெய்வநுணித்தற்குணர்ந்தமேலோர்
சீலமும்புகழ்க்குவேண்டுஞ் செய்கையுந்தெரித்துகொண்டு
பாலவருமுறியாவுந் தலேயற்குப்பயக்குநீரார்."

இத்தக்கவியில், தசரதமகாராசனுடைய மந்திரசபாமண்டபத்திற்கூடிய அரசர்குலத்தவர்களுக்கு, 'மேலோர்' எனப் பெயர்வந்திருக்கின்றது. முந்தினகவியில், 'மேல்வர்' எனவந்திருக்கிறது. ஆகவே, 'மேலவர், மேலோர்' என்னும் இரண்டு பெயர்களும் ஒருபொருள் கொள்வனவாம்.

(iii) அரசர்குலத்தவர்களாகிய மேன்மக்களுக்கு இருக்கவேண்டிய சிறப்புக்குணங்கள் வருமாறு:—

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், மந்தரைசூழ்ச்சிப்படலம், 62-வது கவி.

"கல்வியுமனையும்புகழ் கணக்கிலாற்றலும்
வில்வினைபுரிவையு மழகுகீரமும்
எல்லையில்குணக்களும் பூரணற்கேயது
புல்லிடையுருத்திரமுதையும் போலென்றான்."

இங்ஙனம், பரதனுக்கு 'கல்வியறிவும், இனமைப்பருவமும், பாராளுந்திறமும், வில்வித்தைச்சமர்த்தும், உடற்கட்டழகும, புஜபலபராக்கிரமமும், கொடைமுதலான பல சிறந்த குணங்களுமுண்டு' என்ச் சொல்லியிருக்கின்றது. ஆகவே, 'மேலோர்' எனப் பெயர்பெற்ற 'மேன்மக்களுக்கு' மேற்கூறிய அரசர்குலச்சிறப்புலக்ஷணங்களெல்லாம் ஒருங்கேயிருக்கவேண்டும்.

(iv) மேற்படி மந்தரைசூழ்ச்சிப்படலம், 64-வது கவி

"வெயின்முறைக்குலக்கத்திரவன் முதலியமேலோர்
உயிர்முதற்பொருடிறம்பிணு முரைதிறமபாதோர்
மயின்முறைக்குலத்துரிமையை மனுமுதல்மரபை
செயிருறப்புலச்சித்தையா லெனசொனுப்தியோய."

இக்கவியில், கைகேசியானவள் அந்தக் கூனியைப்பார்த்து, சூரியசந்திரகுலத்தரசர்களாகிய 'மேலோர்' எனக் கௌரவப்பட்டும் பெற்றவர்கள் உயிர்மோசம் பொருள்மோசங்கள் வந்தபோதிலும், மனத்தளர்வின்றி சத்திரியகருமமுறையில் மாறுபடார்கள் என்று சொல்லுகிறார்கள். இங்ஙனம், சதசித்திரியகுலத்தவர்களுக்கு 'மேலோர்' என்று பெயர்வந்திருக்கிறது.

(v) பின்னும்,

கம்பராமாயணம்—அயோத்தியாகாண்டம், தைலமாட்டுபடலம், 36-வது கவியிலும்,
கிஷ்கிந்தாகாண்டம, சம்பாதிப்படலம், 36-வது கவியிலும்,
சுந்தரகாண்டம், சூடாமணிப்படலம, 76-வது கவியிலும் கவிஞர்.

(vi) மூதுரை, 4-வது கவி:

"அட்டாலுமபால்சுவையிற் குன்றாதவல்ல
நட்டாலுந்தண்பலவர் தண்பலவர்—கெட்டாலும்
மேன்மக்கண்மேன்மக்களே சங்குசுட்டாலுந்
தானமிக்கவெண்மைதரும்."

திருக்குறளில், 'சங்குசுடடாலுந் தான்மிக்கவெண்மை நும்' எனவும், 'கெடடாலும் மேனமக்கள் மேனமகளே' எனவுஞ் சொல்லியிருக்கிறது. அதற்குத் தாற்பரியம வருமாறு "வெண்ணிறமபொருந்திய 'சங்கைநீற்றவை அதன நிறமகுனறாது, அதிகவெண்ணிறமாகவிளங்கும. அதுபோல, சதந்திரியகுலத்தவீரகளாகிய மேனமக்கள் கைகெடடபபோன பேர்திலும், சத்திரியகுலத்திற்குரிய மேண்பாடான கருமங்களிற் குன்றார்கள்" 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மகளே'='The noble will be noble still, though they be reduced to poverty.' இக்கவியில் வந்திருக்கிற 'மேன்மக்கள்' எனபது அரசர்குலத்தவர்களைக் குறித்து, 'சான்றோர்' என்னும் பெயருடன் ஒருபொருள்தொண்ட தெமாம்.

(vii) மூதுரை 11-வது கவி:

"கற்பினைவேண்டுமட்டாவது கல்வியினாற்றெரிந்தத்
தொற்பினைவேண்டுபாரும்வேண்டாரே-யிற்பிறந்த
நீரினியல்பாகுமப்பாலவ்வழியே
சொரமுகுசான்றோர்க்கணி."

இதில, கலவருஞ் சான்றோரும் சிறிய பொருள்களிற் கூறப்பட்டிருக்கின்றனர். மூதுரை, வேண்மக்களும், சான்றோர் மேன்மக்களுமாம். இவை 'சான்றோர், மேனமக்கள்' என்னும் பெயரில் வந்தொருபொருளவை.

(viii) மூதுரை 15-வது கவி:

"சிரியர்தெட்டாலுஞ் சிரியர்சிரியரே
யல்லர்தாரதெட்டாலுங் கெஞருகு—சிரிய
பொனனைக்குயுரைத்தாற் பொனனுருகுமென்னுமம்
மனனன்றுயுரைத்தக்கால்."

இதற்கண்ணே 'அல்லாதார்' என்னப்பட்ட கலவரும், சிரியரும் எதிரிகளாக வைத்துக்கூறப்பட்டிருக்கின்றனர். ஆனதால், கலவர் சிறுமக்களும், சிரியர் மேன்மக்களுமாம். 'சிரியர்' என்னும்பெயர் 'சான்றோர்' என்னும் பெயருடன ஒரு

பொருள்கொண்டதாம்.* 'சிரியாகெடாலுஞ் சிரியர் சிரியரே'='மேனமக்கள்கெட்டாலுமமேனமகக்ள்மேனமக்களே,'

='Though the noble be reduced in circumstances, the noble are noble still.'

(ஈ) ஆத்திசூடி, 94-வது சூத்திரம்.

"மேன்மக்கள்சொற்கேள்."

இதற்கு 'அரசர்குலத்தவர்களாகிய தரைத்தனத்தார் கட்டளைக்கு இணக்கதடந்துவா' என்பது பொருளாம். இதில், 'மேன்மக்கள்' என்பதற்கு, 'மேலோர்; அரசர்குலத்தவர்களாகிய சத்திரியர், தரைத்தனத்தார்' எனபது கருத்தாகும்.

(உ) திருவள்ளுவர்குறள், 98-வது அதிகாரம், 8-வது கவி:

"மேலிருந்து மேலல்லவர் மேலல்லர்
கீழிருந்துங் கீழல்லவர் கீழல்லர்."

இதற்குச் சாற்பரியம்,

"கயவராகிய மேன்மக்கள் மேன்மக்கள் தானத்திருந்தபோதிலும், மேன்மக்களாகா. மேன்மக்கள் கைகெட்டுப்போய் கீழ்மக்கள்தானத்திலிருந்தபோதிலும், கீழ்மக்களாகாது, மேன்மக்களேயே யாவர்கள்" என்பதாம். இவ்வாறாகத் திருவள்ளுவரால்மேலோர்,மேலோர்களைப் பெயர்பெற்ற மேன்மக்கள் அரசகுலத்தவர்களாகிய 'சான்றோர்' என்னுங் கௌரவப்பட்டப்பெயர் பெற்றுள்ளார்கள்.

இனி 'ஆய்த்தோர்' என்னும் பெயருக்குச் சாற்பரியங்கூறுவோம்.

6. ஆயர்தோர்

'ஆய்த்தோர்' என்பது, 'ஆய' என்னும் வினைமுதலடியிற்பிறந்த 'ஆய்த்தல்' என்னும் இறந்தகாலவினைமுற்றினின்றுவந்த வினையாலணையும் பலர்பாற்பெயராம். ஆய்த்தவன், ஆய்த்தான், ஆய்த்தாள் என்பன வினையாலணையுமொருபொருள், ஆண்பாற்பெயரனைத்து, ஆயதவர், ஆய்த்தார்,

* சதாசார்தி, உ-வது பொருளதிகாரம் 'அறிவுடையோர்' காண்க.

ஆய்ந்தோர்' என்பன வினையாலணையும் ஒருபொருட்பலபாற பெயர்களுமாம். 'ஆய்ந்தோர்' என்பதற்குச் சத்திரியருல மேன்மைக்குரியவற்றைத் தீர்க்கவாராய்ச்சிசெய்தி, அத்தப் பிரகாரம் ஒழுகிவருபவர்கள் என்பது பொருளாகும். பார்ப் பனக்குலத்தவர்களுக்கும் இப்பெயர் ஏற்கும். 'ஆய்ந்தோர்' என்பது 'சான்றோர்' என்னும்பெயருடன் ஒருபொருள்கொ ள்வதற்கு உதாரணங்கள் வருமிடங்களிற் கண்டுகொள்க.

இனி 'உயர்ந்தோர்' என்னும் பெயருக்குத் தாற்பரியங் கூறு வோம்.

7. உயர்ந்தோர்.

'உயர்ந்தோர்' என்பது, 'உயர்' என்னும் வினைமுதலடியி னின்று பிறந்த 'உயர்ந்தேன்' என்னும் இறந்தகால வினை முற்றினின்று வந்த வினையாலணையும் பலர்பாற்பெயராம். 'உயர்ந்தவன, உயர்ந்தான், உயர்ந்தோன்' என்பவைகள் இறந்த காலவினையாலணையும் ஒருபொருள் ஆண்பாற்பெயர்களும், 'உயர்ந்தவர், உயர்ந்தார், உயர்ந்தோர்' என்பன இறந்தகால வினையாலணையும் ஒருபொருட் பலர்பாற்பெயர்களுமாம். 'உயர்ந்தோர்' என்பதற்குச் 'சத்திரியருலமேன்மைக்குரிய வற்றிற்சிறந்த மேன்மக்கள்' என்பது பொருளாம். பார்ப் பனக்குலத்தவர்களுக்கும் இத்தப்பேர் ஏற்கும். 'உயர்ந்தோர்' எனனும் பட்டப்பெயர் 'சான்றோர்' என்னும் பட்டப்பெயரு டன ஒருபொருள்கொள்வதற்கு பெயராம். உதாரணங்கள் வருமிடங்களிற்கண்க.

இனி 'ஆரியர்' என்னும்பெயருக்குத் தாற்பரியமும், மேற் கோளும் கூறுவோம்.

8. ஆரிய.

இந்த 'ஆரியர்' என்னும் பெயருக்கு உற்பத்தி மூன்றுவகை ப்படும்.

க-வது. 'ஆரியம்' என்பது ஒருதாடாம். அது இமயகிரிமுதல் விந்தியகிரிவரையிலுள்ளது. அதில் சமஸ்கிருதவாரியபா

வைத பேசப்பட்டது. அதற்கு ஆரியநாடு* என்றுபெயர்; இந்தச்சமஸ்கிருதவாரியர் அந்தநாட்டிற்கு வருவதற்குமுன்னே, தமிழாரியப்பாஷைக்காரர் அந்தநாட்டிற்குடியிருந்தார்கள். சமஸ்கிருதவாரியர் அந்தநாட்டிற்குவந்தபிற்பாடு, அவர்கள் தமிழாரியர்களை விந்தியமலைக்குத் தெற்கிலுள்ள தக்ஷிண நாட்டிற்கு ஒட்டிவிட்டார்கள். இந்தத் தென்பூமிநாட்டிற்குத் தமிழ்நாடு, அல்லது திராவிடநாடு என்றும், அந்தவடநாட்டிற்கு சமஸ்கிருதர்நாடு, அல்லது ஆரியநாடு என்றும் பெயர்களுண்டாயின. ஆகவே, சமஸ்கிருதராகிய ஆரியநாட்டாருக்கு 'ஆரியர்' என்றொரு பேருண்டு. மேலே, திவாகரம், மக்கட்பெயர்த்தொகுதி, 11-வது சூத்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிற 'ஆரியர்,' இந்த சமஸ்கிருதர்களாகிய ஆரியரல்லர். ஆனதால், இந்த ஆரியர் இன்னரென்று இதனடியில் காண்பிப்போம்.

2-வது. 'ஆரியர்' என்பது 'ஆரி' என்னும் தமிழ்மொழியை அடியாகக்கொண்டு பிறந்துவந்திருக்கின்ற பெயராம். 'ஆரியன், ஆரியான், ஆரியோன்' என்பன ஒருபொருள் ஆண்பாற்பெயர்களும், 'ஆரியர், ஆரியார், ஆரியோர்' என்பன ஒருபொருட் டலர்பாற்பெயர்களுமாம். 'ஆரி' என்னும்பெயருக்கு (i) ஆரமாலையாகிய ஆத்திமாலைதரித்த சோழன், ஆரமாலையன்எனவும், (ii) மேன்மை எனவும், தாற்பரியமாம். ஆகவே, 'ஆரியர்' என்பதற்கு (i) தமிழ்நாட்டாசர்குலத்தவர்கள் எனவும், (ii) மேன்மையுடையோர், மேலோர், மேன்மக்கள் எனவும், பொருளமையும்.

3-வது. 'ஆரி' என்பது உமையவளாகிய காளிக்குப்பெயராகும். 'ஆரியை' என்றும் சொல்வர். ஆனதால், 'ஆரியர்' என்பதற்கு 'காளிகாதேவிக்குரிமையுடைய தமிழாசர்குலத்தவர்கள்' என்பது பொருளாம். தமிழாசர்குலத்தவர்களுக்குச் சிவனுங்காளியும் குலதெய்வங்களானதால், அவர்கள் காளிகாதேவி புத்திரரென்றப்பட்டார்கள். ஆகவே, அவர்களுக்கு 'ஆரியர்' எனப் பட்டப்பெயருண்டாயிற்று.

---

* 'ஆரியநாடு' என்பதற்கு 'ஆரியவர்த்தம்' என்னும் ஒரு பெயருண்டு. ஆரியவர்த்தம்=Aryavarta.

தமிழரசர்குலத்தவர்கள் தாங்கள்போய்க் குடியேறிய நகரங்களின் வடதிசையில் சத்தியாயிக காளியையும், கீழ்திசையில் ஐயனாரையும், மேல்திசையில் திருமாலையும், தென்திசையில் கந்தமாதனரையும், நகரத்துமத்தியில் சிவனையும் நகரிகாவலர்களாக ஸ்தாபித்து அந்தந்தத்திசையில் அவர்களுக்கு ஆலயங்கள்கட்டி அவர்களை நமஸ்கரித்து வந்தார்கள். அன்றியும், சேரசோழ பாண்டியர்கள் ஆளியில் இந்தத்தமிழ் நாட்டிற்குவந்து குடியேறியபோது, கருவூருக்குச் சமீபத்திலிருக்கின்ற 'மதக்கரை' என்னும் ஊர் இந்த மூன்றுபோர்களுடைய நாடுகளுக்கும் நடு எல்லையிலிருந்தது. அந்த மதக்கரையில் மூவர்களுங்கூடி தங்கள் குலதாயதியாகிய காளிகாதேவிக்கு ஒரு ஆலயங்கட்டி அவளுடையச் சிலையை ஸ்தாபித்துப் பூசித்துவந்து, அந்தக்கோவிலுக்கு, செல்லாயியம்மன் கோவிலென்று பெயரிட்டார்கள்.

'செல்லாயி' என்பது காளிகாதேவிக்கு ஒரு செல்லப்பேராம். தமிழ்நாட்டரசர்கள் காளிகாதேவி வரபுத்திரரான படியால், அவர்கள் காளியைச் செல்லத்தாய் என்றுசொல்லியருமைபாராட்டிவந்தனர். ஆகவே அந்த ஆலிக்கோவிலுக்குச் செல்லாயியம்மன்கோவிலென்று பெயரிட்டிருந்தனர். உமையவளாகிய காளிக்குத் தமிழரசர்குலத்தவர்களின் தாய் என்று அருத்தம்கொண்டுவருகின்ற 'அம்மை' என்னும் பெயரிட்டு அவளை அம்மைவடிவே சொல்லிவந்தனர். அவர்கள் பிறகாலத்தில் பங்குபாகங்கள் பிரிக்கிறபோது, இந்தப் பொதுக்கோவிலில் கவனஞ்செய்யப்பட்டிருந்த காளிகாதேவி சிலையைத் 'தலை, உடல், பாதங்கள்' என மூன்று கூறுகளினர். பாதங்கள் இரண்டும் சோழன் பங்குக்கும், தலை பாண்டியன பங்குக்கும், உடல் சோழபங்குக்கும்வந்தது. சோழன் தன்பங்குக்குவந்த பாதங்களிரண்டையும் தன் நகரியாகிய உறையூருக்குக்கொண்டுசென்று, அந்த ஊருக்கு வடபாரிசத்தில் காளிகாதேவிக்கு ஒரு ஆலயங்கட்டி, அந்த ஆலயத்திற்குளளே அந்தப் பாதங்களிரண்டையும்வைத்து அவளுக்குப் பூசைசெய்துவந்தான். நான்தனையும் அந்தப்பாதங்களிரண்டும் அந்த

ஆல்யத்திற்குள்ளிருந்து 'வருகின்றன. காளிகாதேவி கோவி யொன்று பிரத்தியேகமாகச் செய்துவைத்து, ஊர்கோலம் போகும்போது, அதை விமானத்திலேற்றிக்கொண்டு போவது வழக்கம்.

இந்தக்கோவிலுக்கும் செல்வாயியம்மன்கோவிலென்றே பெயர். மதக்கரை சோனபூமியிலிருந்ததினாலே, அவன் தன் பங்குக்குவந்த காளிகாதேவியுடனே அந்த மதுகரையிலிருந்த செல்வாயியமன்கோவிலிலேயே வைத்துப் பூசைசெய்து வந்தனன். அந்த உடனே மதுக்கரையிலிருக்கிற செல்வாயியமன்கோவிலிற் நாளதுவ் வாணவர்ம். பாண்டியன் தன் பங்குக்குவந்த தலையைத் தன் பூமிக்குக்கொண்டுபோய்விட்டான். இந்த மதுக்கரை மூன்றுபேருக்கும் பொதுப்பூமியாயிருந்தது. இந்த ஊருக்குக் கற்பக அமுதமாகிய 'மது' என்னும் பெயரைச்சேர்த்து, 'மதுக்கரை' எனப் பெயரிட்டனர்.

இதனால், தமிழ்நாட்டு மூவேந்தர்களும் தங்கள் குலதாயகியாகிய காளிகாதேவியையே முக்கியமாக வணங்கி, அவளை அருமைபெருமையாகச் 'செல்வாயியம்மன்' எனச்சொல்லி மகிழ்ந்துவந்தது தெளிவாக விளங்குகின்றது. ஆகவே, அவர்களுக்குக் 'காளிபுத்திரர்' எனப்பெயருண்டாயிற்று. இத்தப் பதவுற்பத்திப்படிக்கு, 'ஆரியர்' என்பதற்குக் 'காளிகாதேவி பர்ப்புத்திரர், காளிகாதேவிதொண்டர்' என்பதுபொருளாம்.

தமிழாரியர்செல்வர்களுக் ஆதியில் சிவபக்தர்களாகிய காளி பூசைசெய்துவந்தனர்.

ஆரியர்=மேன்மக்கள்,
=Great-men,
=Noblemen.

இது 'சான்ரோர்' என்பதோடு ஒருபொருள்கொண்டபெயராம்.

(i) கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம். வனம் புகுபடலம், 1-வது ஷ்லோ.

" ஆரியர்புணர்ப்பாற் பெரும்பகைமென்மணம் ஊம்
ஈரமுமுளதிலன் நம்மெனுமேல்
ஆரியனவரலோடு மற்றனவியுதற்
காருறுகுமானன் சூட்டியதவணென்னும்."

இந்தக்கவியில், இராமருக்கு 'ஆரியன்'எனப் பெயர்வந் திருக்கின்றது. 'ஆரியன்' எனபதற்கு, 'மேன்மகன, சான ரோன' என்பது பொருளாம்.

(ii) கம்பராமாயணம், ஆரணியகாண்டம, மாரீசன் வதைப்படலம், 229-வது கவி.

"ஆரியனேயகூற வனனதுதனனோகஙகிச்
சீரியதன்றிதென்று சிந்தையிற்றெளிந்ததம்பி
காரியமென்னேயீண்டு கண்டதுகனகமானுல்
வேரியந்தெரியல்வீர மீள்வதேமேன்மையென்ரூன்"

இக்கவியிலும், இராமருக்கு 'ஆரியன்' எனப் பெயாவந் திருக்கிறது. ஆகவே, 'ஆரியர், சான்ரோர்' என்பன ஒரு பொருட்பதங்களாகும்.

(iii) இவைகளேயனறி,

கம்பராமாயணம், ஆரணியகாண்டம், சடாயுவதைப்படலம், 143-வது கவியையும்,

" கிஷ்கிந்தாகாண்டம், வாலிவதைப்படலம் 34-வது கவியையும்,

" கிஷ்கிந்தாகாண்டம், அரசியற்படலம் 52-வது கவியையும்,

" கிஷ்கிந்தாகாண்டம், கிஷ்கிந்தைப்படலம் 68-வது, 134-வது கவிகளேயும்,

" கிஷ்கிந்தாகாண்டம், ஆறுசெல்படலம 9-வது கவியையும்,

" கிஷ்கிந்தாகாண்டம், மயேந்திரப்படலம் 2-வது, 8-வது கவிகளேயும்,

" சுந்தரகாண்டம், ஊர்தேடுபடலம், 96-வது கவியையும்,

" சுந்தரகாண்டம், நிந்தனைப்படலம், 40-வது கவியையும்,

" சுந்தரகாண்டம், உருக்காட்டுபடலம், 21 வது, 95-வது கவிகளேயும்,

" யுத்தகாண்டம், மந்திரப்படலம், 43-வது கவியையும் காண்க.

இனி 'உலகு' என்னும் பெயருக்குத் தாற்பரியமும், மேற் கோளுங் கூறுவோம்.

9. உலகு.

உலகு இடவாகுபெயரானதால்,

உலகு = உலகோர்,
= உயர்ந்தோர்,
= மேன்மக்கள்,
= அரசர்குலப்பெரியோர்.

திவாகரம், மக்கட்பெயர்த்தொகுதி, 17-வது சூத்திரம்.

'உலகமெனபதுயர்ந்தோர்மாட்டே.'

இந்தச்சூத்திரம் அரசர்குலப்பிரிவுப்பெயர் கூறுகின்ற சூத் திரங்களிலொன்றும். 'உயர்ந்தோர்' எனனும்பெயர் 'சான றோர்' எனனும் பெயருடன ஒருபொருள்கொண்ட பதங்களி லொன்றும். ஆனதால், 'உலகு' என்பதும அரசர்குலக் கெனரவபபட்டப்பெயர்களிலொன்றாகும.

'உலகவழக்கு' = உயர்ந்தோர்வழக்கு,
= உலகோரும்பும் அரசாவழகுகு,
= மேன்மக்கள்வழக்கு.

(i) கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகா நீங்குபடலம், 44-வது கவி.

"கொழுனன்றுஞ்சமெனவுங்கொள்ளாதுலகமெனவும்
பழிநின்றுயருமெனவும் பாவமுனதாமெனவும்
ஒழிகின்றிலேயன்றியுமொன்றுணர்கின்றிலேயானினிமேல்
மொழிகின்றனவென்னென்னு முனியுமுறையன்றெனபான்."

இந்தக்கவியில், வஞ்சிட்டன் கைகேயியப்பார்த்து, நீ உன் பிடிவாதச்சிந்தையை நீக்காயேயாயின், உன் தாய்கனிறந்து போவான், உலகம் உன்செய்கையை ஒப்பாது, பழிநீங்காதி பெருகும், பாவம்வரும். என்னசொன்னாலும் நீ கேட்கிறு யில்லை. நான் இனி என்னசொல்லப்போகிறேன் என்றான் எனச் சொல்லியிருக்கின்றது. இங்ஙனம் 'உலகங்கொள்ளாது'

எனக் கூறியிருக்கிறது. 'உலகங்கொள்ளாது' என்பதற்கு, 'உயர்ந்தோர் ஒப்பார்கள், மேனமக்கள் ஒப்பார்கள், உலக மோம்பும், அரசர்கள் ஒப்பார்கள்' என்பதனருத்தாம். ஆகவே, 'உலகு' என்னும்பெயர் 'சான்றோர்' என்னும் பெயருடன் ஒருபொருள்கொண்ட மொழியாம்.

(ii) மேற்படி நகர்நீங்குபடலம், 62-வது கவி.

"மாற்றுன்செயலாமென்றுங் கணவன் வரமீய்ந்துள்ளம்
ஆற்றுதியத்தானென்று மதித்தாளவனுமவணைத்
தேற்றுநின்றுள்மகணைத் திரிவானென்றுளரசன் [ஞ்."
தொற்றுன்மெய்யென்றுலகஞ்சொல்லும் பழிக்குஞ்சோர்வா

இங்ஙனம், கோசலையாகிறவள் "அரசன்தோற்றுன் மெய் யென்றுலகஞ்சொல்லும் பழிக்குஞ்சோர்வாள்" எனச் சொல் லியிருக்கின்றது. அதற்கு 'அரசன் வாக்குத்தவறிப்போ னென்று உலகம்பழிக்குமேஎன்று நினைத்து மயங்கினன்' என் பது பொருளாம்.

"உலகம்பழிசொல்லும்"—உயர்ந்தோர் பழிசொல்லுவார் கள்,
—அரசர்கள் பழிசொல்லுவார் கள்,
—மேனமக்கள்பழிசொல்லுவார் கள்.

(iii) மேற்படி நகர்நீங்குபடலம், 59-வது கவி.

"தன்னாதியேசரக்கென்பெயரம் தழுவாவருவாவகைதின்
றென்னாதியேதீதெனுமெம் மிறைவனென்றுரைவோய்
வின்னாதியேசென்றபின் மகளேவெல்லியிலுலகங்
கொன்னாதியேயென்றுன் கணவர்குறையக்குறைவான்."

இக்கவியில், கோசலையாகிறவள், 'உலகங்கொள்ளாதன் றே வெனுங் கணவருரைத்தது, இதில் 'உலகங்கொள் ளாது' எனவந்திருப்பதாலும் மேலேகாட்டியதே பொருளாம். அன்றியும், இந்தக்கவியில் தசரதனைக் 'உரைவோய்' என்ப

பெயர்வந்திருக்கிறது. 'உரவோய்' என்பதற்கு 'அறிவுடையோனே, சான்றோனே' எனபதுபொருளாம். 'அறிவுடையோன' எனபதுஞ் சந்திநியஞலப்பட்டப்பெயராக இங்ஙனம் வருவதுகாணக.

(iv) பிண்ணும்,
திருவள்ளுவாகுறன், 47-வது அதிகாரம், 10-வது கவியையும்,
,, 67-வது அதிகாரம் 10-வது கவியையுங் காண்க.

இனி 'ஆன்ரோர்' எனனும் பெயருக்குத் தாற்பரியமும் மேற்கோளுங்கூறுவோம்.

10. ஆன்ரோர்.

'ஆன்ரோர்' என்பது, 'ஆகு' எனனும் வினைமுதலடியினின்று பிறந்த 'ஆன்றோன்' என்னும் இறந்தகாலவினைமுற்றினின்று வந்தவினையாலணையும் பலர்பாற்பெயராம்.

'ஆகு'—ஆனிறேன், ஆன்றேன், ஆனுவேன்.

இந்த 'ஆகு' என்னும வினையும், 'சால்' (=சாகு) எனனும வினையும் ஒருபொருள்கொண்ட வினைகளாய், 'நிறைதல்' என்னுங்கருத்தில்வந்துவழங்குகின்றன.

ஆன்ரோர்=சான்ரோர்,
=நிறைந்தோர்,
=Great-men,
=Noblemen.

'ஆன்றவன், ஆனுன், ஆனுேன்' என்பன இறந்தகாலவினையாலணையும் ஆன்பான் ஒருபொருட்பெயர்களும், 'ஆன்றவர், ஆன்ரு, ஆன்ரோர்' என்பனவன் இறந்தகாலவினையாலணையுமொருபொருட் பலர்பாற்பெயர்களுமாம். ஆகவே, ஆனேரு, சான்ரோர்' என்பன ஒருபொருட்சினவிகள்.

(v) கம்பராமாயணம், கைகேசிசூழ்வினைப்படலம், 8-வது கவி.

"ஆன்றவனவ்வமை கூறினனேயலனா
தோன்றியபோலுத் தொடர்தீதுமேலை
சான்றிலமோதுளவாக மன்னதியன்
றேன்றவரைக் கிளையேமிதியென்ருள்.

இந்தக்கலியில், கைகேசியாகிறவன் தசரதனைப்பார்த்து, "நீர் அன்று எனக்கு வரக்களித்த இரண்டு வரமுந்தரவேண்டும் எனறுள்" என வருகின்றது. இங்ஙனம் தசரதனுக்கு 'ஆன்றவன்' எனப் பெயாவந்திருக்கிறது. 'ஆனறவன' எனப தற்குச் 'சத்திரியகுலச்சான்றோன்' என்றுபொருளாம.

மேலேகாண்பித்திருக்கிறபிரகாரம்,

சிலைக்குச், 'சான்றோர்மாது' எனவும்,
ஸ்ரீராமருக்கு, 'ஆரியன்' எனவும்,
தசரதனுக்கு, 'ஆன்றவன்' எனவும் பெயர்கள் வந்திருக்கின்றமையால், இவர்களெல்லாருஞ் சத்திரியகுலச்சானறோர்களேயாம். ஆனதால், 'சானறோர், ஆரியர், ஆன்றவர்' என்னும் பெயர்கள் ஒருபொருட்குலப்பெயர்களாம்.

(ii) பின்னும்,

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகர்நீங்குபடலம், 138-வது கவியையும்,
,, அயோத்தியாகாண்டம், குகப்படலம், 5-வது கவியையுங் காண்க.

இத்தப்பிரகாரமாக, நாம் இங்ஙனம், நிவாகரம், மக்கட்பெயர்த்தொகுதி, 11-வது சூத்திரத்திற்கு விபரமான தாற்பரியமும் மேற்கோளுங்காட்டி, அதிலபொருளைத் தெளிவாகக் காண்பித்தோம். இத்தப்பிரகாரணத்தை முடிப்பதற்குமுன்னே, இன்னமும் ஒருவிஷயத்தைத் தெரியக்கூறுவோம். அதை விஞ்ஞாபனரூபமாக வரைகின்றோம்.

விஞ்ஞாபனம்.

சானறோர்களாகிய தொண்டைமண்டல தொண்டைநாட்டுக் குடிமேன்மக்களாகிய தாங்களாக அந்தவிடத்தில் வாசஞ்செய்துவந்தமக்கள், தமிழ்ச்சாதியிலுண்டான நாலாவகையான நிவாகரம், நிகண்டு, தொல்காப்பியம் முதலியவற்றில், 'சானறோர்' என்னும் பெயர் வரவில்லையே ஏனோ?

விடை.

திவாகரம், நிகண்டு, தொல்காப்பியம் முதலான சாதியட்டவணை நூல்களில், 'சாணர்' என்னுங் குலப்பெயர் வரவில்லை, அது நிசந்தான். அந்தநூல்கள் எழுதப்பட்டகாலத்தில், 'சாணர' எனனும் மருஉமொழிப்பெயர்வந்து வழங்காததால், அப்பெயர் அந்தநூல்களிற் வரையப்படவில்லை. திவாகரம், நிகண்டு, தொல்காப்பியம், சான்றோர்புராணம் முதலான நூல்கள் எழுதப்பட்டகாலத்தில் இந்தக்குலத்தவர்கள் 'சான்றோர், சான்ரர், சான்றவர்' எனப் பெயர்பெற்றிருந்தனர். ஆனதால், அந்த நூல்களில் இந்த மூன்றுபெயர்களும் வந்துவழங்கியிருப்பதைத் தெளிவுறக் காண்கிறோம். தொல்காப்பியத்தில்—'சான்றோர்' எனனும் பெயர் அரசர்குலப்பெயராக வந்திருக்கிறது. 'சானரர், சான்றவர்' என்னும்பெயர்களும் அதினோடு ஒருபொருள்கொண்ட தொகைநிலைப்பெயர்களாக வந்துவழங்கின. திவாகரநூலில்—'சான்றோர' எனனுமபெயர் அரசர்குலப்பெயராக வந்திருக்கின்றது. 'சானரர், சான்றவர்' என்னும் பெயர்கள் அதினோடு ஒருபொருள்கொண்ட தொகைநிலைப்பேர்களாக வந்து வழங்கின. சூடாமணிநிகண்டில்—'சான்றவர்' என்னும் பெயர் அரசர்குலப்பெயராக வந்திருக்கின்றது. 'சான்றோர், சான்ரர்' என்னும் பெயர்களும் அதினோடு ஒருபொருள்கொண்ட தொகைநிலைப்பெயர்களாக வந்து வழங்கின. சான்றோர்புராணத்தில்—'சான்றவர், சான்ரர், சான்றோர்' என்னும் மூன்றுபெயர்களும் அரசர்குலப்பெயர்களாக வந்து வழங்கியிருக்கின்றன. பெரியபுராணத்தில்—'சான்ரர்' என்னும் பெயர் அரசர்குலப்பெயராக வந்திருக்கின்றது. 'சான்றோர், சான்றவர்' என்னும பெயர்களும் அதினோடு ஒருபொருள்கொண்ட தொகைநிலைப் பெயர்களாக வந்து வழங்கின. இதுபோலவே, வீரசோழியம், மூதுரை, வெற்றிவேற்கை, நாலடியார், குறள் முதலான நூல்களிலும் இந்த இயல்புப்பெயர்களே வந்து வழங்கியிருக்கின்றன. ஆனதால், பூர்வசாதியட்டவணைநூல்களிலும், பிறநூல்களிலும், 'சான்றோர், சான்ரர், சானறவர்' என்னும்பெயர்

கள் எந்தவிடத்தில் வருகிறதோ அதுதான இந்தக்குலத்தவர்க ளுடைய பெயர் நிற்கவேண்டிய விடமாம்.

ஜாதிசங்கிரகசாரஸூலாசிரியர் இது தெரியாதவராய், 'சான ரோர்' எனனும பெயர்வந்திருக்கிற 11-வது சூத்திரததை விட்டுவிட்டு, அந்தப் பெயர்வந்திராத 50-வது சூத்திரத்தில், சங்கச்செய்புள்களில் வராத 'சாணர்' என்னும பெய்ரை முன்பின்பாராமல் அப்பிவைத்திருக்கிறார். அவர் 'சாணர்' என்னும்பெயரை 11-வது சூத்திரத்தில் ஒட்டவைக்க முயன றிருப்பாராஞல், சரியாயிருக்கும். 'சான்ரோர்' எனனும் பெயருக்குச 'சாணர்' என்னும் பதம் மரூஉமொழிப்பெயா எனபரேயாயின், நியாயஞ்சரியாயிருக்கும். 'சான்ரோர்' என் னுமபெயருடன 'சான்ரர், சான்றவர்' என்னும் மெர்ழிகள தொகைநிலைப்பெயராகி, பிற்காலத்தில் 'சாணர்' என மரூஉ மொழியாகி, உலகவழக்கில் வரலாயிற்றென்று விபரித்துக்கூ றினல், காரியமுஞ் சரியாயிருக்கும், இலக்கணத்திற்கும் வழு வின்றும.

